ශ්‍රී ලංකා විවෘත විශ්වවිද්‍යාලය

මානව ශාස්ත්‍ර හා සමාජ විද්‍යා පීඨය

නීති අධ්‍යයන දෙපාර්තමේන්තුව

නීතිවේදී උපාධි පාඨමාලාව - IV වන මට්ටම

අවසාන පරීක්ෂණය - 2016/2017

අපරාධ නීතිය - LWU 2312//LLU4806

කාලය - පැය තුන (03) යි.

---

දිනය - 2018.07.21 වේලාව - පෙ.ව.09.30 - ප.ව.12.30

---

මුලු ප්‍රශ්න සංඛ්‍යාව 08 යි.

ප්‍රශ්න පහකට (05) පමණක් පිළිතුරු සපයන්න.

අපැහැදිලි අත්අකුරු සඳහා ලකුණු අඩු කරනු ලැබේ.

01. "අපරාධකරුවන් ට එරෙහිව ශ්‍රී ලංකාවේ දී අපරාධ වගකීම ස්ථාපනය කිරීම සඳහා සෑම අපරාධයක්ම පදනම් වී ඇති ප්‍රධාන සම්පාදක ධාතු දෙක ඔප්පු කිරීම අත්‍යවශ්‍ය වේ."

මෙම ප්‍රකාශය සමග ඔබ එකඟ වන්නේ ද?

පහත දැක්වෙන දෑ විස්තර කරන්න.

අ) අපරාධයක සම්පාදක ධාතු

ආ) දණ්ඩ නීති සංග්‍රහයේ සහ අනෙකුත් ව්‍යවස්ථාවන් හි සඳහන් වරද සඳහා සාවද්‍ය මනස (*mens rea*)පිළිබඳ සිද්ධාන්තයෙහි අදාලත්වය.

(ලකුණු 20)

02. පෙරේරා, විවෘත විශ්වවිද්‍යාලයේ කොළඹ ප්‍රාදේශීය මධ්‍යස්ථානයේ ප්‍රධාන ආරක්ෂක නිලධාරියා වේ. 2018.06.25 දින ඔහු රාත්‍රී සේවා මුරයේ යෙදී සිටියදී, විශ්වවිද්‍යාලය වටා ඇති තාප්පයේ කැඩීගිය හිදැසකින් පුද්ගලයන් සිව් දෙනෙකු විශ්වවිද්‍යාල භූමිය තුළට ඇතුළු වෙනු ඔහු දුටුවේ ය. ඔහු තව දුරටත් එදෙස බලා සිටින විට දුටුවේ ඔවුන් මුගුරු සහ ආයුධ වලින් සන්නද්ධව සිටින බවයි. එදින සේවයේ නියුතු තම සගයින්ට ඔහු ආධාර ඉල්ලා කෑ ගසන විටම එම කණ්ඩායමේ පුද්ගලයන් දෙදෙනෙකු ඔහු වෙත දිව විත් ඔහුගේ අත් පා ගැට ගැසූ හ. අනතුරුව, අසල පිහිටි විවේක ගැනීම සඳහා ඉදි කර තිබුණු කුටියක් වෙත ඔහුව ඇදගෙන ගොස්, තුවක්කුවක් ඔහු වෙත එල්ල කරමින් බේරියාමට උත්සාහ කළහොත් මරා දමන බවට ඔහුට තර්ජනය කළේය.

ඒ අතරතුර අනෙක් දෙදෙනා සේප්පුව බලහත්කාරයෙන් විවෘත කර එතුළ වූ මුදල් සියල්ලම රැගෙන පලා ගිය හ.

සාකච්ඡා කරන්න.

අදාල ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩුතීන්දු ඇසුරින් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

(ලකුණු 20)

03. එකම සේවා ස්ථානයක සේවය කරන නදීකා හා තිළිණි හොඳ මිතුරියෝ වෙති. සාමාන්‍යයෙන් සෑම මාසයක් අවසානයේදී ම දෙදෙනා එක්ව සාප්පු සවාරි යති. එක් දිනක් සුපුරුදු පරිදි ඔවුහු සාදයන් සඳහා අඳින ඇඳුම් මිලදී ගැනීම පිණිස නගරයේ සාප්පු සවාරියේ යෙදුන හ. දෙදෙනාම සාදයන් සඳහා අඳින මිල අධික ඇඳුම් මිලදී ගැනීමෙන් අනතුරුව උමං මාර්ගයේ ඇවිද යද්දී මැදිවියේ තැනැත්තෙක් පිහියක් අතැතිව ඔවුන් දෙසට දිව ආවේය. ඔහු නදීකා අත තිබූ පාර්සලයක් උදුරා ගැනීමට පටන් ගන්නවාත් සමඟම තිළිණි, නදීකා ගේ බෑගය උදුරා ගැනීමෙන් ඔහුව වලක්වා ලීමට උත්සාහ දැරුවා ය. මෙම ක්‍රියාවෙන් කුපිත වූ පුද්ගලයා තිළිණිට පිහියෙන් ඇනීමට තැත් කළේය. කෙසේ වෙතත්, තිළිණි පිහි ඇනුමින් බේරී පළා යාමට සමත් වූවා ය. එම පුද්ගලයා තිළිණි පසුපස හඹා යනු දුටු නදීකා උදව් ඉල්ලා කෑගැසුවාය. එවිටම, ඔහු නදීකා වෙත හැරී ඇයට පිහියෙන් ඇන මරණයට පත් කළේය.

සාකච්ඡා කරන්න.

අදාල ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩුතීන්දු ඇසුරින් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

(ලකුණු 20)

04. "සියළු තුවාල පීඩාවන් වුවද සියළු පීඩාවන් තුවාල නොවේ."

මෙම ප්‍රකාශය සමඟ ඔබ එකඟ වන්නේ ද?

1995 අංක 22 දරණ දණ්ඩ නීති සංග්‍රහ (සංශෝධන)පනතින් දණ්ඩ නීති සංග්‍රහය සංශෝධනය කිරීමට පෙර සහ පසු පැවති නීතිය ඇසුරෙන් තුවාල කිරීම පිළිබඳ ශ්‍රී ලංකාවේ නීතිය සංසන්දනය කරන්න.

(ලකුණු 20)

05. ආනයන හා අපනයන ව්‍යාපාරයක් වන සීමාසහිත සන් ලංකා පුද්ගලික සමාගමෙහි අයකැමි වරයා ලෙස සිල්වා මහතාව පත් කර තිබුණි. ඔහුගේ පත්වීම් ලිපියෙහි පැහැදිලිව සඳහන් වන්නේ පාරිභෝගිකයන්ගෙන් සමාගම වෙත අයවිය යුතු මුදල් එකතු කර අසල පිහිටි පෞද්ගලික බැංකුවක පවත්වාගෙන යන එම සමාගමේ ගිණුමෙහි තැන්පත් කිරීම ඔහුගේ ප්‍රධාන රාජකාරිය බවයි. සාමාන්‍යයෙන් ඔහු පාරිභෝගිකයන්ගෙන් රුපියල් මිලියන ගණනින් මුදල් එකතු කර ඔහුගේ සාමාන්‍යාධිකාරී වරයාගේ උපදෙස් පරිදි බැංකුවේ තැන්පත් කරයි.

2018.05.10 දින ඔහු පාරිභෝගිකයන් කිප දෙනෙකුගෙන් රු:2,000,000/- ක මුදලක් එකතු කළේය. මෙම මුදල සමාගමේ බැංකු ගිණුමේ තැන්පත් කරනු වෙනුවට ඔහු එම මුදලින් අඩක් තම බෑගයේ තබාගත් අතර ඉතිරි අර්ධය තමාගේ කාර්යාල ලාච්චුවේ තිබෙන්නට හැරියේ ය. එදිනම සවස සිල්වාගේ මිතුරකු වූ රවි ඔහු හමුවීමට පැමිණ තම භාර්යාවගේ ශල්‍යකර්මය සඳහා වූ වියදම් පියවා ගැනීම පිණිස රු:500,000/- ක මුදලක් ණයට ඉල්ලා සිටියේ ය. රවි පත්ව සිටින අසරණ තත්ත්වය පිළිබඳව කම්පා වූ සිල්වා රු:500,000/- මුදල රවිගේ අතට ලබා දුන්නේය. පසුදින රවි එම මුදල ආපසු දුන් අතර සිල්වා එම මුළු මුදලම සමාගම් ගිණුමෙහි තැන්පත් කළේ ය.

සාකච්ඡා කරන්න.

අදාල ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩුතීන්දු ඇසුරින් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

(ලකුණු 20)

06. මැදිවියේ පුරුෂයකු වූ මහේන්ද්‍රන් පුද්ගලික සමාගමක පාරිභෝගික සේවා නිලධාරියකු ලෙස සේවය කළේය. අවිවාහකයකු වූ ඔහු මහල් නිවාස සංකීර්ණයක කුලියට ගත් නිවසක තනිව වාසය කරයි. නිරන්තරයෙන්ම සේවයට නොපැමිණීම හේතුකොට ගෙන සමාගම විසින් ඔහුව සේවයෙන් පහ කරන ලදී. එහි ප්‍රතිඵලයක් ලෙස හටගත් බහුවිධ මනෝදෛහික සංකූල තාවයන්ගෙන් (multiple psycho-somatic complications) ඔහු පෙළුනේ ය. ඇතැම් වේලාවන්හි ඔහු අහසට යමක් කොඳුරමින් පැය ගණන් මුහුදු වෙරළේ ගත කිරීමට පුරුදුව සිටියේ ය. ඔහු බොහෝ ප්‍රමාද වී නිවසට පැමිණි අතර ඇතැම්විට ක්‍රමවත්ව ආහාර ගැනීම ද නොකළේය. මෑතක සිට ඔහු අතිශය කලහකාරී ස්වභාවයෙන් හැසිරුණු අතර මහල් නිවාසයේ අසල්වැසි කිහිප දෙනෙක් මහේන්ද්‍රන්ගේ අයහපත් හැසිරීමට විරුද්ධව පොලීසියට පැමිණිලි කළහ.

දිනක් මහේන්ද්‍රන්ගේ අසල්වැසියකු වූ රොනී ඔහු දෙසට පැමිණෙමින් සිටිය දී මහේන්ද්‍රන් ඔහුට ගල්වලින් දමා ගැසුවේ ය. ඉන් එක් ගලක් රොනීගේ හිසෙහි වැදී ඔහු එතැනදීම මරණයට පත් විය.

රොනී ගේ මරණය සිදු කිරීම සම්බන්ධයෙන් මහේන්ද්‍රන් චෝදනා ලබා ඇත.

අපරාධ වගකීමෙන් මිදීම පිණිස ඔහුට යම්කිසි විත්තිවාචකයක් අදාල කර ගත හැකි දැයි දැන ගැනීමට ඔහු අපේක්ෂා කරයි.

සාකච්ඡා කරන්න.

අදාල ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩුතීන්දු ඇසුරින් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

(ලකුණු 20)

07. "කාන්තාවන්ට එරෙහිව සිදු කළ හැකි ඉතාමත්ම දරුණු අපරාධය වන්නේ ස්ත්‍රී දූෂණයයි."

ඔබ මෙම ප්‍රකාශය සමඟ එකඟ වන්නේ ද?

1995 අංක 22 දරණ දණ්ඩ නීති සංග්‍රහ (සංශෝධන)පනතින් දණ්ඩ නීති සංග්‍රහය සංශෝධනය කිරීමට පෙර සහ පසු පැවති නීතිය ඇසුරෙන් ස්ත්‍රී දූෂණය පිළිබඳ ශ්‍රී ලංකාවේ නීතිය සංසන්දනය කරන්න.

අදාල ව්‍යවස්ථාපිත ප්‍රතිපාදන සහ නඩුතීන්දු ඇසුරින් ඔබේ පිළිතුර තහවුරු කරන්න.

(ලකුණු 20)

08. පහත දැක්වෙන මාතෘකා අතරින් <u>දෙකක්</u> පිළිබඳ සටහන් ලියන්න.

අ) පුද්ගලික ආරක්ෂාවේ අයිතිය

ආ) බලෙන් ලබා ගැනීම

ඇ) ප්‍රකෝපය

ඉ) නැත් කිරීම. (10 x 02 = ලකුණු 20)

**හිමිකම් ඇවිරිණි.**

THE OPEN UNIVERSITY OF SRI LANKA
FACULTY OF HUMANITIES AND SOCIAL SCIENCES
DEPARTMENT OF LEGAL STUDIES
LL.B DEGREE PROGRAMME- LEVEL IV
FINAL EXAMINATION-2016/2017
LWU2312/LLU4806- CRIMINAL LAW
DURATION – 03 HOURS

**Date: 21st JULY 2018** **Time: 9.30 a.m. -12.30 p.m.**

**Number of Questions – 08**
**Students will be penalized for illegible handwriting**

**Answer FIVE (05) questions only**

1. "Every crime is made up of two constituent elements the proof of which is *sine qua non* for the establishment of criminal liability against the offenders in Sri Lanka."

   Do you agree with this statement?

   Explain the following.

   (a) The constituent elements of a crime.

   (b) The applicability of the doctrine of *mens rea* to the offences of the Penal Code and other statutes.

**(20 marks)**

2. Perera is the chief security officer of the Colombo Regional Centre of the Open University. While he was on duty on 25th June 2018 at night shift, he noticed four persons entering in to the university premises through a broken space of the boundary wall of the university. He kept watching for some time and noticed that they were armed with clubs and weapons. No sooner he started to call his colleagues who were on duty for help, two persons of the gang ran up to him and tied up his hands and legs. He was then dragged into a nearby summer-hut and threatened by pointing a gun at him to kill him if he struggled to escape. Meanwhile other two gangsters force - opened the safe and took away all cash in it.

   Discuss.

   Support your answer with relevant statutory provisions and caselaw.

**(20 marks)**

3. Nadeeka and Thilini are good friends who are working in the same workplace. Usually both of them go shopping together at the end of every month. One day as usual they started shopping in the central city to buy partywear. Both of them purchased very expensive partywear and while walking down the subway, a middle-aged man came running towards them with a knife in his hand. He started to grab one of the parcels in Nadeeka's hand. At this moment Thilini attempted to prevent him grabbing Nadeeka's bag. The man, having enraged by this act, attempted to stab Thilini. However, Thilini escaped from the stabbing and ran away. Having seen that the man was chasing Thilini, Nadeeka screamed for help. At this point the man turned to Nadeeka and stabbed her to death.

Discuss.

Support your answer with relevant statutory provisions and caselaw.

**(20 marks)**

4. "All hurts are injuries but not vice versa."

Do you agree with this statement?

Compare and contrast the law relating to causing hurt in Sri Lanka before and after the Penal Code was amended by the Penal Code (Amendment) Act No. 22 of 1995.

**(20 marks)**

5. Mr. Silva was appointed as a cashier of Sun Lanka Pvt.Ltd., a company which conducts export and import business. Mr. Silva's letter of appointment clearly mentions that his main duty is to collect the monies due to the company from the customers and credit it to the company account maintained at a nearby private bank. Usually he collects millions of rupees from the customers and bank them as per the instructions given to him by his General Manager.

On 10$^{th}$ May 2018, he collected Rs.2,000,000/= from several customers. Instead of depositing this money in the company account he kept half the money in his brief case while the other half was left in his office drawer. In the evening of the same day, Silva's friend Ravi came to see him and requested him a loan of Rs. 500,000/= to cover the expenses incurred in connection with his wife's surgery. Having moved by the plight of Ravi, Silva hand-delivered Rs. 500,000/= to Ravi. On the next day, Ravi returned that money and Silva deposited the entire amount in the company's account.

Discuss.

Support your answer with relevant statutory provisions and caselaw.

**(20 marks)**

6. Mahendran is a middle-aged male who worked in a private company as a customer care officer. He is unmarried and living alone in a rented apartment. Due to his constant absence from service he was dismissed by the company. As a result, he developed multiple psycho-somatic complications. At times he used to stay long hours on the beach whispering something to the sky. He comes to his apartment very late and sometimes does not take meals regularly. As of recently he became very nasty and boisterous that a few apartment neighbours complained to the police against his bad conduct.

   One day when a neighbour of his apartment namely Ronnie was approaching towards Mahendran, he pelted stones at him. One of the stones hit Ronnie's head and he died on the spot.

   Mahendran is charged with committing murder of Ronnie.

   He wishes to know whether there is any defence he can use to get exoneration from his criminal liability.

   Discuss.

   Support your answer with relevant statutory provisions and caselaw.

   **(20 marks)**

7. "The most heinous crime that can be committed against women is rape"

   Do you agree with this statement?

   Compare and contrast the law relating to rape in Sri Lanka before and after the Penal Code was amended by the Penal Code (Amendment) Act No. 22 of 1995.

   Support your answer with relevant statutory provisions and caselaw.

   **(20 marks)**

8. Write notes on any **TWO** of the following;

   a) Right of Private Defence.

   b) Extortion.

   c) Provocation.

   d) Attempt.

   **(10x2=20 marks)**

********Copyrights Reserved*******

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான பீடம்
சட்டக் கற்கைகள் திணைக்களம்
சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4
இறுதிப்பரீட்சை – 2016/2017
**LLU4806/LWU2312** – குற்றவியல் சட்டம்
காலம் : 03 மணித்தியாலங்கள்

---

திகதி: 21.07.2018 நேரம் : மு.ப 09.30 – பி.ப 12.30

---

வினாக்களின் மொத்த எண்ணிக்கை எட்டு (08)
ஐந்து (05) வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்

01. ஒவ்வொரு குற்றமும் இரு ஆக்கக் கூறுகளால் உருவாக்கப்படுகின்றதற்கான சான்று, இலங்கையில் குற்றம் புரிந்தவர்களுக்கு எதிரான குற்றவியல் பொறுப்புடைமையை நிறுவுவதற்கான இன்றியமையாத தகுதிக்கூறு *"sine qua non"* ஆகும்.

இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

பின்வருவனவற்றை விளக்குக.
(அ) குற்றத்தை ஆக்கும் கூறுகள்
(ஆ) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவை மற்றும் பிற நியதிச் சட்டங்களின் குற்றங்களுக்கு குற்றமனம் *(mens rea)* கோட்பாட்டின் பொருத்தப்பாடு.

(20 புள்ளிகள்)

02. பெரேரா என்பவன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கொழும்பு பிராந்திய நிலையத்தின் தலைமைப் பாதுகாப்பு அலுவலர் ஆவான். 2018 ஆம் ஆண்டு ஜூலை 25 ஆம் திகதி அவன் இரவு நேர கடமையில் இருந்த போது பல்கலைக்கழக எல்லைச் சுவரின் உடைந்த இடைவெளியினூடாக பல்கலைக்கழக வளாகத்துள் நால்வர் உட்புகுவதை கவனித்தான். அவன் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்ததுடன், அவர்கள் தடிகள் மற்றும் ஆயுதங்கள் கொண்டிருந்ததையும் கவனித்தான். கடமையில் இருந்த தனது பணி நண்பர்களை அழைக்க ஆரம்பித்தவுடன், அக்குழுவில் இருந்த இருவர் அவனை நோக்கி ஓடி வந்து அவனது கால்கள் மற்றும் கைகளை கட்டினர். அவன் அருகில் இருந்த கோடைக்கால குடிலுக்கு இழுத்துச் செல்லப்பட்டு, அவன் தப்பிக்க போராடினால் அவனைக் கொல்லப்போவதாக, துப்பாக்கியொன்றை அவனை நோக்கிக் காட்டி பயமுறுத்தினர். இதேவேளை குழுவின் மற்ற இரு உறுப்பினர்களும் வலிந்து தள்ளித்திறந்து, பாதுகாப்பில் இருந்த, சகல பணத்தையும் எடுத்துச் சென்றனர்.

ஆராய்க.

உமது விடையினை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்பு வழக்குகள் என்பன கொண்டு ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

03. நதீகா மற்றும் திலினி ஆகியோர் ஒரே வேலைத்தளத்தில் பணியாற்றும் நல்ல நண்பியர்கள் ஆவர். பொதுவாக இருவரும் மாத இறுதியில் ஒன்றாக பொருட்கள் வாங்கச் செல்வர். ஒருநாள் எப்போதும் போல அவர்கள் மத்திய நகரில், கொண்டாட்டத்திற்கு அணியும் ஆடைகளை வாங்க ஆரம்பித்தனர். இருவரும் விலை மதிப்புள்ள

கொண்டாட்டத்திற்கு அணியும் ஆடைகளை வாங்கிக் கொண்டு சுரங்கப் பாதையில் நடந்து செல்லும் போது, மத்திய வயதுடைய ஒருவன் அவர்களை நோக்கி கையில் கத்தியுடன் ஓடி வந்தான். அவன் நதீகாவின் கையிலுள்ள பை ஒன்றைப் பறிக்க ஆரம்பித்தான். இக்கணம் அவன் நதீகாவின் பையை பறிப்பதை திலினி தடுக்க ஆரம்பித்தாள். இந்த நடவடிக்கையால் மிகச் சினமுற்ற அவன், திலினியை கத்தியால் குத்த முயன்றான். எவ்வாறாயினும், இக்கத்தி குத்தலில் இருந்து தப்பித்து திலினி ஓடினாள். அவன் திலினியை துரத்துவதைக் கண்ணுற்ற நதீகா உதவிக்கோரி குரல் எழுப்பினாள். இத்தருணத்தில் அவன் நதீகாவை நோக்கி திரும்பி, குத்திக் கொன்றான்.

ஆராய்க.

உமது விடையினை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

04. "சகல காயங்களும் ஊறுகள் ஆகும் ஆயின் மறுதலை உண்மையானது அல்ல"

இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா?

22ஆம் இலக்க 1995ஆம் ஆண்டின் (திருத்தப்பட்ட) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் இலங்கையில் காயம் ஏற்படுத்தல் தொடர்பான சட்டத்தை ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

05. திரு. சில்வா என்பவன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொழிலை மேற்கொள்ளும் சன் லங்கா லிமிடட் எனும் கம்பனியில் காசாளராக நியமிக்கப்பட்டார். கம்பனி அதன் வாடிக்கையாளர்களிடம் இருந்து பணத்தைப் பெற்று அதனை அருகிலுள்ள தனியார் வங்கியில் பேணப்பட்ட கம்பனி கணக்கிற்கு வரவிடுவதால், அவனது முக்கிய பணி பணத்தை சேகரித்தல் என சில்வாவின் நியமனக் கடிதம் தெளிவாகக் குறிப்பிடுகிறது. பொதுவாக அவன் மில்லியன் ரூபா பணத்தினை வாடிக்கையாளரிடம் இருந்து சேகரித்து பொது முகாமையாளரால் வழங்கப்பட்ட வழிகாட்டலின் பிரகாரம் வங்கியிலிடுவான்.

10 ஆம் திகதி மே 2018, அவன் ரூபா. 2,000,000/= பெறுமதியான பணத்தினை பல வாடிக்கையாளரிடமிருந்து சேகரித்தான். இப்பணத்தை கம்பனி கணக்கில் வரவிடுவதற்கு பதிலாக, பாதி பணத்தினை அவனது கைப்பெட்டியிலும், மற்றப்பாதி பணத்தினை காரியாலய இழுப்பறையிலும் வைக்கப்பட்டது. அதே நாள் மாலை, அவனைக் காண வந்த சில்வாவின் நண்பன் ரவி தனது மனைவியின் சத்திர சிகிச்சை தொடர்பில் ஏற்பட்ட செலவினை ஈடு செய்ய ரூபா. 500,000/= இனை கடனாகக் கோரினான். ரவியின் இடரினால் துயருற்ற சில்வா ரூபா. 500,000/= இனை ரவியின் கையில் அளித்தான். மறுநாள் ரவி அப்பணத்தினை மீள் அளித்ததுடன், சில்வா முழுத்தொகையையும் கம்பனியின் கணக்கில் வரவிட்டான்.

ஆராய்க.

உமது விடையை பொருத்தமான நியதிச்சட்டப் பிரிவுகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்கள் என்பவற்றுடன் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

06. மகேந்திரன் என்பவன் தனியார் கம்பனியில் வாடிக்கையாளர் சேவை அலுவலகராக பணியாற்றிய மத்திய வயதுடைய ஆண் ஆவான். அவன் திருமணமாகாததுடன், வாடகைக்கு அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் தனியாக வசிக்கிறான். சேவைக்கு தொடர்ச்சியாக சமூகமளிக்காத காரணத்தினால் அவன் கம்பனியில் இருந்து நீக்கப்பட்டான். இதன் விளைவாக, பன்முக உளவியல் கோளாறு அவனில் உருவானது. சில சமயங்கள், நெடுநேரம் கடற்கரையில் அமர்ந்து வானத்தை நோக்கி ஏதோ முணுமுணுப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தான். அவன் தனது அடுக்கமாடி குடியிருப்பிற்கு மிகத் தாமதமாகி வருவதுடன் சில சந்தர்ப்பங்களில் தொடர்ந்து உணவு உட்கொள்ளாது இருந்தான். அண்மைக்காலமாக அவன் மிக மோசமாகவும் சத்தமிடுபவனாகவும் உள்ளமையால் சில குடியிருப்பின் அயலவர்கள் அவனது துர் நடத்தைக்கு எதிராக காவல் நிலையத்தில் முறையிட்டனர்.

ஒரு நாள், அவனது குடியிருப்பின் அயலவரான ரொனி என்பவர் மகேந்திரனை நோக்கி வர, அவன் அவர் மீது கற்களை எறிந்தான். ஒரு கல் ரொனியின் தலையை தாக்கி, அவன் சம்பவ இடத்திலேயே இறந்தான். மகேந்திரன், ரொனியை கொலை செய்தமைக்காக குற்றம் சாட்டப்பட்டான்.

அவன், இக் குற்றப் பொறுப்புடைமையிலிருந்து விடுபட அவன் உபயோகிக்கத்தக்க ஏதேனும் பாதுகாப்பு காணப்படுகின்றதா என அறிய விரும்புகிறான்.

ஆராய்க.

உமது விடையினை பொருத்தமான நியதிச்சட்ட உறுப்புரைகள் மற்றும் தீர்ப்புச் சட்டங்களால் ஆதாரப்படுத்துக.

(20 புள்ளிகள்)

07. "பெண்களுக்கு எதிராக புரியக்கூடிய மிகக் கொடூரமான குற்றம் பாலியல் வன்புணர்வு ஆகும்".

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா?

22ஆம் இலக்க 1995ஆம் ஆண்டின் (திருத்தப்பட்ட) குற்றவியல் தண்டனைச் சட்டக்கோவையின் திருத்தத்திற்கு முன்னர் மற்றும் பின்னர் இலங்கையில் பாலியல் வன்புணர்வு தொடர்பான சட்டத்தை ஒப்பிட்டு ஆராய்க.

(20 புள்ளிகள்)

08. பின்வரும் ஏதேனும் **இரண்டின் (02)** மீது குறிப்புக்கள் எழுதுக.

(அ) தற்காப்புரிமை
(ஆ) அச்சுறுத்திப் பறித்தல்
(இ) கடும் கோபம்
(ஈ) குற்ற முயற்சி

(10×2 = 20 புள்ளிகள்)

*பதிப்புரிமை பெற்றது*